காலத்தில் கலைஞர்களை மதிக்கக்கூடிய விதத்தில், ஒழுங்கான முறைகளில் அவர்கள் எதிர்பார்க்கக்கூடிய அளவிற்கு வாய்ப்பு வழங்கப்பட்டு வருகிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

(முற்பகல் 10-00)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. புஷ்பராஜ். திரு. புஷ்பராஜ், உங்களைத்தான். (குறுக்கீடு) பொன்னுசாமியா? திரு. பொன்னுசாமி, நீங்கள் இடத்தை மாற்றி உட்கார்ந்திருக்கிறீர்களா? உங்கள் இடத்திலே போய் உட்காருங்கள்.

திரு. கே. பொன்னுசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாமக்கல் மாவட்டம், சேந்தமங்கலம் தொகுதிக்கு உட்பட்ட கொல்லிமலை ஒன்றியத்தைச் சுற்றுலாத் தலமாக அரசு அறிவிக்குமா என்பதை மாண்புமிகு அமைச்சர் வாயிலாக அறிய விரும்புகிறேன். கொல்லிமலை ஒன்றியத்தில், இந்தியாவிலேயே வேறு எங்கும் இல்லாத அளவில் ஒரு மாபெரும் நீர்வீழ்ச்சி 200 அடி உயரத்திலிருந்து கொட்டுகிறது. அந்த இடத்திற்குச் செல்வதற்குப் போக்குவரத்து வசதி அமைத்துக் கொடுத்து, சுற்றுலாத் தலமாக அறிவிக்க முன்வருவாரா என மாண்புமிகு அமைச்சர்வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூலக் கேள்விக்கும், இந்தக் கேள்விக்கும் சம்பந்தம் இல்லாமல் இருந்தாலும்கூட, மானியக் கோரிக்கை வருகிற 28 ஆம் தேதி இருக்கிறது; கொல்லிமலைக்கு என்ன செய்வோம் என்பது அப்போது அறிவிக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 86, மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. சண்முகவேலு, மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் அவர்கள்.

86—

தொழில்நுட்பப் பயிலகம்

***171— திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

2006 ஆகஸ்ட் 24]

உடுமலைப்பேட்டையில் கைத்தறி மற்றும் துணிநூல் துறை மூலமாக Fashion Technology குறித்து நவீன தொழில்நுட்பப் பயிலகம் அமைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. என்கேகே.பெ. ராஜா, கைத்தறித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

உடுமலையில் கைத்தறி மற்றும் துணிநூல் துறையின் வாயிலாக நவீன ஆடை வடிவமைப்பு தொழில் பயிலகம் அமைப்பது குறித்த செயற்குறிப்பு எதுவும் தற்சமயம் அரசின் பரிசீலனையில் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. சண்முகவேலு.

திரு. சி. சண்முகவேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உரையில், அதற்குச் சாத்தியக்கூறு இல்லை என்று கூறினார்கள். எங்களது உடுமலைத் தொகுதியானது, நூற்பாலைகள் அதிகமாக உள்ள பகுதி. அங்கே நூற்பாலைகள் அதிகம் உள்ளன. விசைத்தறிக் கூடங்கள் அதிகமாக அங்கே இப்போது செயல்பட்டு வருகின்றன அந்த அடிப்படையிலேதான், அங்கே கைத்தறி மற்றும் துணிநூல் துறையின்மூலமாக Fashion Technology குறித்து நவீன தொழில்நுட்பப் பயிலகம் அமைக்க வேண்டும் என்று கேட்டேன். உயர் தொழில்நுட்ப நெசவுப் பூங்காக்கள், காவிரிப் பகுதியிலும், வைகைப் பகுதியிலும், கோவை மாவட்டம், பல்லடம் பகுதியிலும். இப்பொழுது அதிக விசைத்தறிகளை உள்ளடக்கிய தொகுப்பு முறையிலே தறிக் கூடங்களைக் கட்டும் பணி மற்றும் இதரப் பணிகள் நடைபெற்று வருகின்றன. இதனால், வேலைவாய்ப்பு மற்றும் எதிர்பார்க்கக்கூடிய உற்பத்தி கிடைக்கிறது. அதேபோல, சர்வதேசத் தரத்துடன் ஆயத்த ஆடை உற்பத்திக் கூடங்களும், திருப்பூர், சென்னை இருங்காட்டுக்கோட்டைப் போன்ற பகுதிகளிலும் நடைபெறுகின்றன. அதேபோல, எங்களது உடுமலைச் சட்டமன்றத் தொகுதியிலேயும் Fashion Technology குறித்து ஒரு நவீன தொழில்நுட்பப் பூங்கா அமைக்க அரசு வருங்காலத்திலாவது முயற்சி மேற்கொள்ளுமா என்பதைத் தங்கள்மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. என்கேகே.பெ. ராஜா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்சமயம், சென்னை தரமணியிலும், கோவை மாவட்டம் திருப்பூரிலும் இந்த நவீன ஆடை வடிவமைப்புத் தொழில்நுட்பப் பயிலகம் செயல்பட்டுக்கொண்டிருக்கிறது. அதற்கு அடுத்தபடியாக, மத்திய அரசின் ஜவுளித் துறையின்மூலமாக மாநில அரசுடன் இணைந்து, தென் தமிழ்நாட்டிலே இதைச் சற்று ஊக்குவிக்க வேண்டும் என்ற எண்ணத்தின் காரணமாக பரமக்குடி பகுதியிலும் தொடங்கவிருக்கிற ஒரு சூழ்நிலை உருவாக்கப்பட்டு வருகிறது. மேலும் தேவையெனில், நம்முடைய மாமன்றத்து உறுப்பினருடைய கோரிக்கை, இந்த அரசின்மூலமாகப் பரிசீலனை செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. சிவானந்தம்.

திரு. ஆர். சிவானந்தம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆரணி தொகுதியிலும் அதைச் சுற்றியுள்ள போளூர், செய்யாறு, ஆற்காடு ஆகிய தொகுதிகளிலும் சுமார் 30-க்கும் மேற்பட்ட பட்டு கைத்தறி கூட்டுறவுச் சங்கங்களும், ஆரணியிலேயே தனியார் பட்டு மையங்கள் சுமார் நூற்றுக்கும் மேற்பட்ட நிறுவனங்களும் உள்ளன. இங்கே புதிய design-கள் நிறைய தேவைப்படுவதால், அந்த design-களை அமைக்கின்ற Designing Centre, ஆரணியில் அமைக்கப்படுமா? அதை நிர்வகிக்கின்ற உதவி இயக்குநர் அலுவலகம் ஒன்று, ஆரணியில் அமைக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. என்கேகே.பெ. ராஜா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய உறுப்பினருடைய கோரிக்கை இதுவரை அரசினுடைய பரிசீலனையில் இல்லை என்றாலும், வருகிற காலத்தில் தேவையெனில், அது செயல்படுத்தப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 87, மாண்புமிகு உறுப்பினர் திரு. கி. ஆறுமுகம், மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.